[திரு. எ.வ. வேலு] [*2022 மார்ச் 22*

இது ஒன்று. மற்றொன்று, அடையாள அட்டையைக் காட்டுவது குறித்துச் சொன்னார்கள். கிட்டத்தட்ட 50-க்கும் மேற்பட்ட மலைவாழ் மக்கள் வசிக்கிறார்கள். அவர்கள் மலைவாழ் மக்கள்தானா என்று பார்ப்பதற்காகத்தான், எப்போதாவது திடீரென்று அடையாள அட்டை கேட்கப்படுகிறது. எல்லோரையும் check *பண்ணுவதில்லை. மலைவாழ் மக்கள்தானா என்பதற்கான அடையாள அட்டையைக் காட்டுங்கள் என்று சொல்கிறார்கள். அதில் ஒன்றும் தவறு இல்லை. ஆகையால், அரசைப் பொறுத்தளவிற்கு ஏற்கெனவே நான் சொன்னதுபோல், 3,160 வண்டிகள் ஒரே* night*-ல் நிற்கின்றன. ஆக, சகஜ நிலைக்குச் செல்ல வேண்டும் என்பதுதான் இந்த ஆட்சியினுடைய கருத்து. எனவே, உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பினை நாம் எதிர்பார்க்கிறோம். அந்தத் தீர்ப்பிற்குப் பின்னால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவு எடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(இ) நெய்வேலி, என்.எல்.சி. நிறுவனத்திற்கு நிலம் வழங்கியவர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு, உரிய இழப்பீடு மற்றும் மாற்றுக் குடியிருப்பு வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன் அவர்கள், என்னவென்று சொல்லுங்கள்.*

***திரு. ஆ. அருண்மொழிதேவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்தில், நெய்வேலியிலுள்ள* NLC *நிறுவனத்தின் இரண்டாவது சுரங்கம் அமைந்துள்ள இடம் மற்றும் மூன்றாவது சுரங்கம் அமையவுள்ள இடம் ஆகியவை எனது புவனகிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் வருகிறது. காலங்காலமாக வாழ்ந்து வருகிற அப்பகுதி விவசாயப் பெருங்குடி மக்கள், ஏற்கெனவே இரண்டாவது சுரங்கப் பணிகளுக்காக நில எடுப்பு செய்யப்பட்டபோது,* NLC *நிறுவனத்தால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாததால், தங்களின் மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வுக்காக அறிவித்த இழப்பீடுகள் மற்றும் நிரந்தர வேலைவாய்ப்பு ஆகியவற்றிற்காக தினந்தோறும் போராடி வருகின்ற சூழ்நிலையில், இப்போது மூன்றாவது சுரங்கப் பணிகளுக்கு நில எடுப்பு நடக்கவுள்ளது என்ற அறிவிப்பு, அப்பகுதி மக்களுக்கு பெரிய அச்சத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இப்பகுதி மக்கள் தங்களுடைய நியாயமான கோரிக்கைகளான நிரந்தர வேலைவாய்ப்பு, நிலத்திற்கு உரிய இழப்பீடு, அவர்கள் விரும்புகிற இடத்தில் மாற்றுக் குடியிருப்பு உள்ளிட்ட கோரிக்கைகள். . .*

2022 மார்ச் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், போதும்.*

திரு. ஆ. அருண்மொழிதேவன்: *நிறைவேற்றப்படாததை எதிர்த்து தினந்தோறும் போராட்டம் செய்து வருகின்றார்கள். இதனால். . .*

முற்பகல் 11–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், இரண்டு வரிகளில் சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* NLC *நிருவாகம் நிலக்கரிச் சுரங்கத்திற்கு, நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், திரு. அருண்மொழிதேவன், ஒரு வரியில், ஒரு வார்த்தையில், சுருக்கமாகச் சொல்லுங்கள். (குறுக்கீடு) சீக்கிரம் முடியுங்கள்.*

திரு. ஆ. அருண்மொழிதேவன்: *இரண்டாம் சுரங்க விரிவாக்கத்திற்கு நிலம் வழங்கியவர்களுக்கு உரிய இழப்பீடு வழங்கப்படவில்லை. வழங்கப்படுகின்ற இழப்பீடும் முழுமையாக வழங்கப்படுவதில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதை நீங்கள் சொல்லிவிட்டீர்கள் இல்லையா?*

திரு. ஆ. அருண்மொழிதேவன்: *ஒரே நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வேலைவாய்ப்பைப் பற்றியும் சொல்லியிருக்கிறீர்கள். இழப்பீடு பற்றியும் சொல்லியிருக்கிறீர்கள். சொல்லி முடித்துவிட்டீர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) போதும். தகவல் என்னவென்று தெரிந்துவிட்டது. அரசின் கவனத்தை ஈர்த்தால் போதும். பேச்சை முழுமையாக முடிக்க வேண்டுமென்பது*

இல்லை. (குறுக்கீடுகள்) தகவல் கோருகின்ற முறையில்தான் வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தகவல் தெரிந்து கொண்டார்கள். மாண்புமிகு உறுப்பினரும் போதுமான அளவிற்குச் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், சுருக்கமாக ஒரு வரியில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நிலத்திற்கு உரிய இழப்பீடு வேண்டும், நிரந்தர வேலைவாய்ப்பு வேண்டும் என்ற இரண்டு கோரிக்கைகளையும் அவர் சொல்லிவிட்டார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள், நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அவர் சொல்லியாகிவிட்டது.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு R & R Policy-ஐ வடிவமைக்கின்றபொழுது, மாநில அரசோடு கலந்து பேசி, அதுவும் குறிப்பாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சரோடு கலந்து பேசிதான் R & R Policy-ஐ அறிவிக்க வேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. அருண்மொழிதேவன், உட்காருங்கள்.

திரு. தி. வேல்முருகன்: ஆனால், N.L.C. நிருவாகம் மத்திய அரசோடு, முதலமைச்சரோடு, கலந்துபேசாமல் தாமாகவே ஒரு R & R Policy-ஐ அறிவித்து, 'ஓர் ஏக்கருக்கு இவ்வளவு தொகைதான் இழப்பீடு தருவோம், நிரந்தர வேலையைத் தர மாட்டோம். குறைந்தபட்சம் கூட்டுறவு society உடன் நாங்கள் இணைக்க மாட்டோம்' என்று தான்தோன்றித்தனமான ஒரு நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தில் தலையிட்டு, ஏக்கர் ஒன்றுக்கு ரூ.50 இலட்சமும், வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்புக்கான உரிமையையும், அந்த உத்தரவாதத்தையும் ஏற்படுத்தித் தரவேண்டும். கடந்த காலத்தில் என்னுடைய தலைமையில் போராட்டக் குழு அமைத்தபொழுது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், அன்றைய தலைமைச் செயலாளர் திருமதி மாலதி, I.A.S., அவர்களும் என்னை அழைத்து, பேச்சுவார்த்தை நடத்தி, பின்னர், இன்றைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களோடு, ஒரு சமூக உடன்பாடு ஏற்பட்டது. ஆனால், இப்போது, அவ்வாறு எதையுமே கையாளாமல், மத்திய அரசு R & R Policy-ஐக் கொண்டுவந்து நம்மீது திணிக்கிறார்கள்.

2022 மார்ச் 22] [திரு. தி. வேல்முருகன்]

பஞ்சாபில் ஓர் ஏக்கர் நிலம் எடுப்பதற்கு ரூ.1 கோடி தருகிறார்கள். விமான நிலைய விரிவாக்கத் துறையிலே நிரந்தர வேலை தருகிறார்கள். ஆனால், N.L.C. *நிருவாகம் நிரந்தர வேலைவாய்ப்பு தருவதில்லை. (குறுக்கீடு) உரையை முடித்துவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும், உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிறார்கள். (குறுக்கீடு) போதும். பதிலைக் கேளுங்கள். (குறுக்கீடு) நீங்கள் தகவல் கோரல் என்ற முறையில் பேசினீர்கள். அமைச்சர் அவர்கள் தகவல் தெரிந்துகொண்டார்கள். இப்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர், பதில் சொல்லுங்கள். தேவையென்றால், அதற்குப் பிறகு பேச வாய்ப்பு தரலாம். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. அருண்மொழிதேவன், ஒரு வரியில் உரையை முடியுங்கள்.*

திரு. ஆ. அருண்மொழிதேவன்: *அப்பகுதி மக்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று தினமும் போராட்டம் நடைபெற்று வருகின்ற இந்த வேளையில், இன்றைக்குக்கூட என்னுடைய தொகுதியில் கரிவெட்டி என்ற கிராமத்தில் நூற்றுக்கணக்கான காவலர்கள் அணிவகுத்து, வருவாய்த் துறையினரோடு அளவீடு செய்து கொண்டிருக்கிறார்கள். மக்கள் வேண்டுவது என்னவென்றால், அவர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு, உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்பதுதான். இதனை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதனைச் செய்து தரவேண்டுமென்பதுதான் மக்களுடைய கோரிக்கை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் இருவரும் அவர்கள் பகுதியில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற பிரச்சினையை, அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று காலையில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடத்திலே வற்புறுத்தினார்கள். மாண்புமிகு தொழில் துறை*

[திரு. துரைமுருகன்] [2022 மார்ச் 22

அமைச்சர் அவர்கள் அவையில் இருப்பார் என்ற எண்ணத்தில் நான் அந்தப் பிரச்சினையை அவையில் எழுப்புவதற்கு அனுமதி கொடுக்கலாம் என்று சொல்லிவிட்டேன். ஆனால், தொழில் துறை அமைச்சராக இருந்தாலும் சரி அல்லது தொழிலாளர் நலத் துறை அமைச்சராக இருந்தாலும் சரி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குத்தான் இதைக் கொண்டு செல்வார்கள். நல்ல காலம், அவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே இருக்கிறார்கள். தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள், இந்தப் பிரச்சினையில் தலையிட்டு, தேவையான பரிகாரத்தை காண்பார் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லச் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விஷயம் சம்பந்தமாக கடந்த ஐந்து ஆண்டு காலமாக இதே மன்றத்தில் மாண்புமிகு சபாநாயகரிடம் நாங்கள் கோரிக்கை வைத்தோம். ஆனால், எங்களுடைய கோரிக்கை எடுத்துக்கொள்ளப்படவில்லை. நாங்கள் வாய்ப்புக் கேட்டு, கேட்டு ஐந்து ஆண்டுகள் போராடிப் பார்த்தோம். அப்போதைய தொழில் துறை அமைச்சர் அவர்களும் எடுத்துக்கொள்ள முடியாது என்று சொல்லிவிட்டார்கள்.* NLC *நிர்வாகம் சம்பந்தமானதுதான். (குறுக்கீடு) இதே கோரிக்கையை அப்பொழுது நாங்கள் எழுத்துமூலமாகக் கொடுத்தோம்; ஆனால், எடுத்துக்கொள்ளப்படவில்லை. தற்போது, இதுதொடர்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதே கோரிக்கையை முன்வைத்து நாங்களும் போராட்டம் நடத்தியிருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தில் கண்டிப்பாகத் தலையிடுவார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *போடாதவர்களுக்கும் போட்டுக் காட்டும் இந்த அரசு; கொடுக்காதவர்களுக்கும் கொடுத்துக் காட்டும் இந்த அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)*